செ.வெ.எண்.42

நாள். 18.04.2017

# செய்தி

தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை அரசு அலுவலகங்கள், சார்நிலை அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றில் செயற்படுத்துவதில் ஊக்கமும் ஆக்கமும் திறமையும் கொண்ட அரசுப் பணியாளர்களை ஊக்குவிப்பதன் பொருட்டு பரிசும், பாராட்டுரையும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் மாவட்ட நிலை அலுவலகங்கள் (மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உட்பட), உள்ளாட்சித் துறை அலுவலகங்கள், சார்நிலை அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனம் மறறும் தன்னாட்சி நிறுவன சார்நிலை அலுவலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களில் சிறந்த வரைவுகள், கோப்புகள் எழுதும் பணியாளர்களுக்கு முதல் மூன்று பரிசுகள் ரூ.3000.00, ரூ.2000.00, ரூ.1000.00 என வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் கீழ்க்காணும் விதிமுறைகள் பின்பற்றவேண்டும்

1. இப்பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளப் பரிந்துரைக்கப்படும் ஒவ்வொரு பணியாளரின் இரண்டு கோப்புகள் தேர்வுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2. கோப்புகள் ஒவ்வொன்றும் கையால் எழுதப்பட்டு இருப்பின் 20 பக்கங்களுக்குக் குறையாமலும்/ கணினி அச்சில் இருப்பின் 10 பக்கங்களுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

3. கோப்புகள் போட்டிக்குரியவரால் மட்டும் தொடர்ந்து பேணப்பட்டிருக்க வேண்டும்.

4. கோப்புகள் போட்டிக்குரிய ஆண்டில் (சனவரி 2016 முதல் டிசம்பர் 2016 வரை) முடிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். தொடக்கம் எப்பொழுது வேண்டுமானாலும் இருக்கலாம்.

5. முடிவுறாக் கோப்புகள் போட்டிக்குக் கருதப்பட மாட்டா.

6. 05 அல்லது அதற்கு மேற்பட்ட போட்டியாளர்களின் கோப்புகள் போட்டிக்குக் கருதப்பட்டால் 03 பரிசுகளும் 04 போட்டியாளர்களின் கோப்புகளுக்கு முதலிரு பரிசுகளும், மூன்று போட்டியாளர்களின் கோப்புகளுக்கு முதற் பரிசும் வழங்கப்படும். அதற்குக் குறைந்த எண்ணிக்கையில் உள்ள போட்டியாளர்களின் கோப்புகள் பரிசுக்குக் கருதப்படமாட்டா.

இதன் அடிப்படையில் 2016 -- ஆம் ஆண்டிற்குத் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தின் கீழ் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் பணியாளர்களைத் தெரிவுச் செய்ய அனைத்து நிலை அலுவலகர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் மூலம் கடிதம் அனுப்பி, பணியாளர்களுக்கு சுற்றறிக்கை மூலம் தெரியப்படுத்தி பணியாளர்களிடம் இருந்து 2016– ஆம் ஆண்டு முடிக்கப்பட்ட இரண்டு கோப்புகளைப் பெற்று அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் அனைத்துத் துறைப் பணியாளர்களும் பங்கு கொண்டு பயன் பெறுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முனைவர் மு. கருணாகரன் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஓம்.) மு. கருணாகரன்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம்.

// நேர்ப்படி //

மண்டிலத் தமிழ் வளர்ச்சித்
துணை இயக்குநர் (மு.கூ.பொ),
திருநெல்வேலி.09